<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 325/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1  P.W.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : விக்ரம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தண்டபாணி | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 25.02.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் இந்திரா நகர் வெற்றி அவென்யுவில் வசித்து வருகிறேன். துங்காவி ரோட்டில் உள்ள ராஜலட்சுமி வின்ட்மில்லில் டெக்னீசியனாக வேலை செய்து வருகிறேன். நான் வாடகை வீட்டில் ஒரு வருட காலமாக குடியிருந்து வருகிறேன். எனது மனைவி பெயர் தீபா. எனக்கு 1 ½ வயதில் ஒரு மகன் உள்ளார். கடந்த 18.03.2025 ம் தேதியன்று நான் என் மனைவி மற்றும் குழந்தையையும் கருர் செல்வதற்காக தாராபுரம் பேருந்து நிலையம் சென்று பஸ் ஏற்றி விட்டுவேலைக்காக வின்ட் மில்லுக்க வந்துவிட்டேன். காலை 6.15 மணியளவில வீட்டை பூட்டிவிட்டு வீட்டின் மெயின் கேட்டையும் பூட்டிவிட்டு சாவியை தங்கை முறையான பக்கத்து தெருவில் வசிக்கும் நித்யா வீட்டிற்க சென்று சாவியை கொடுத்துவிட்டு சென்றோம். வேலைக்கு சென்ற நான் அங்கேயே தங்கி பணிபுரிந்தேன் கம்பெனியில் உணவு தருவதால் அங்கேயே தங்கி விட்டேன்.
2. பின்னர் என் குழந்தைக்கு பரமத்தி வேலூரில் மொட்டை அடிக்க வேண்டி இருப்பதால் 23.03.2025 ம் தேதியன்று வீட்டிற்கு சென்று

துணிமணிகளை எடுத்து செல்ல சென்றேன்.பின்னர் நான் வீட்டின் கேட்டை திறந்து பார்த்த போது மெயின் டோர் திறந்து கிடந்தது. கதவை உடைக்கப்பட்டிருந்தது. வீட்டின் உள்ள பீரோவில் இருந்த துணிமணிகள் கலைக்கப்பட்டிருந்தது. பீரோவில் உள்ள ½ பவுன் மோதிரம் –2, ¼ பவுனில் தோடு –2 என் மனைவியின் நகைகளும் மற்றும் பணம் ரூ 10000/– திருடுபோயிருந்தது. நான் உடனே என் தங்கை கணவரிடம் தகவல் கூறினேன் அவர்கள் பார்த்துவிட்டு தங்கையின் கணவர் சுரேஷ் 22 ம் தேதி அங்கு வந்து தண்ணீர் குடித்துவிட்டு பூட்டிவிட்டு சென்றதாக கூறினார். பின்னர் என் மனைவி நகைகளை எடுத்து சென்றிருப்பாரா என்று விசாரிக்கலாம் என்று நான்ஊருக்கு சென்று குழந்தைக்கு மொட்டை அடித்துவிட்டு என்மனைவியிடம் கேட்ட போதுஅவர் நகைகளை வீட்டில் வைத்துவிட்டு வந்ததாகவும் எடுத்து வரவில்லை என்று கூறினார். அதன் பிறகு நான் உடுமலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள விவரம் தெரியும். **புகார் அசா.ஆ .7 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் போலிசார்வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். எதிரியை பிடித்தால் தெரிவிப்பதாக கூறினார்கள். சரியாக தெரியவில்லை ஒரு மாதம் கழித்து திருடிய நபரை பிடித்ததாக சொன்னார்கள். நான் காவல நிலையம் சென்று போய் பார்த்தேன். ஆஜர் எதிரியை தான் நான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். நகைகள் எனக்கு கிடைக்கவில்லை. எனது நகைகளை கவரிங் நகை என்று நினைத்து குளத்தில் ஆஜர் எதிரி வீசி விட்டதாகவும், பணத்தை சேவல் சண்டையில் செலவு செய்து விட்டதாக எதிரி சொன்னதாக போலிசார் கூறினார்கள். நான் இழந்த நகைகள் மற்றும் பணத்தை திரும்ப பெறவும் உரிய நஷ்ட ஈடு பெற வேண்டியும் நீதிமன்றத்தை கேட்டு கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 22.03.2025 ம் தேதி நகைகள் காணாமல் போனதாக தெரிந்து கொண்டிர்களா என்றால் ஆமாம். 23 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். 3 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளிர்கள் என்றால் சரிதான். புகாரில் நகையின் மாடல் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் ஆமாம். காவல்

துறையினரிடம் கேட்டு அவர்கள் சொன்னதன் பேரில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை நான் சொல்லி நண்பர் எழுதினார். புகார் உங்கள் நண்பர் தான் எழுதினார் என்றால் ஆமாம். கையெழுத்து மட்டும் தான் உஙகளுடையது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் புகார் நண்பரால் எழுதப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2. உங்கள் வீட்டை சுற்றி கனகராஜ், ராஜகோபால், பாலகுமார் வீடுகள் அருகில் உள்ளது என்றால் ஆமாம். உங்களது பீரோ உடைக்கப்படவில்லை என்றால் ஆமாம். பீரோ திறந்து வைத்திருப்பதாக புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பின்னிட்டு காவல் நிலையத்தில் இருந்து உங்களை அழைத்ததாக சொல்லி உள்ள நிலையில் தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. ஒரு மாதத்திற்கு பின்னிட்டு எதிரியை பிடித்து விட்டதாக சொல்லப்படும் தேதியில் காவல் நிலையம் சென்றதாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் மணி ஞாபகம் இல்லை. சுமார் காலை 11 மணியளவில் சென்றேன்.
3. இன்றைக்கு தான் முதன் முறையாக நீதிமன்றத்தில் நீங்கள் காவல் துறையினர் அடையாளம் காட்டியதன் பெயரில் எதிரியை அடையாளம் காட்டினீர்கள் என்றால் ஆமாம். சாட்சி பட்டியலில் உள்ள தீபா உங்களது மனைவி என்றால் ஆமாம். நித்யா உங்களது தங்கை என்றால் ஆமாம். சுரேஷ் உங்களது மைத்துனர் என்றால் ஆமாம். மோகன் குமார் ரகு ஆகியோர்கள் உங்களது வீட்டுக்கு அருகில் குடியிருக்கும் நபர்கள் என்றால் எனது நண்பர்.
4. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் காவல்துறையினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இதுபோன்ற சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.325 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தீபா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | விக்ரம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 25.02.2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்திரா நகரில் வசித்து வருகிறேன். வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். எனது கணவர் ராஜலட்சுமி வின்ட் மில்லில் பணிபுரிந்து வருகிறார். நாங்கள் குடியிருப்பது வாடகை ஆகும். கடந்த 18.03.2025 ம்தேதி நான் பரமத்தி வேலூர் திருவிழாவிற்கு செல்ல வேண்டி இருந்ததால் எனது கணவர் என்னையும் என் குழந்தையும் அன்றைய தினம் காலை 6.15 மணியளவில் தாராபுரம் பேருநது நிலையத்திற்கு அழைத்து சென்று கருர் பேருநது ஏற்றிவிட்டு சென்றார் நாங்க் புறப்படுவதற்கு முன் வீட்டை பூட்டிவிட்டு சாவியை எனது கணவரின் தங்கை முறையான நித்யா என்பவரின் வீட்டில் கொடுத்து விட்டு சென்றோம். பின்னர் 23.03.2025 ம் தேதியன்று எனது கணவர் ஊருக்கு வந்து என்னிடம் நகைகளை எடுத்து வந்திர்களா என்று கேட்டார் நான் நகைகளை எடுத்து வரவில்லை நான் பீரோவில் வைத்து விட்டு வந்தேன் என்று கூறினேன் ஏன் இப்படி கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு வீடு பூட்டை உடைத்து நகைகள் காணமால் போனதாக என் கணவர் சொன்னார். வீட்டின் பீரோவில் வைத்திருந்த அரை பவுன் மோதிரம் 2 ஆல்பம் தோடு ஒன்று பணம் ரூபாய் பத்தாயிரம் விவரத்தை என்னிடத்தில்

கூறினார். என் குழந்தைக்கு கோவில் திருவிழாவின் மொட்டை அடிதது விட்டு என் கணவர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். திருடுபோன நகைகள் எனக்கு திருமணத்தின் போது அன்பளிப்பாக வந்த நகைகள் ஆகும். போலிசார் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். நகைகள் கிடைக்கவில்லை. எனது நகைகளை பித்தளை நகைகள் என்று கருதி குளத்தில் வீசிவிட்டதாகவும் பணத்தை சேவல் சண்டையில் செலவு செய்ததாகவும், போலிசார் தெரிவித்ததை என் கணவர் என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>1 .</u> புகார் கொடுக்க நான் காவல் நிலையம் வரவில்லை என்றால் ஆமாம். உங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். திருடு போன விவரம் உங்கள் கணவர் சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம். வீட்டின் பீரோ உடைக்கப்படவில்லை என்றால் ஆமாம். புகார்தாரர் உங்கள் கணவர் என்பதாலும் காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கு இணங்கவும் சாட்சியம் அளிக்க வந்துள்ளிர்கள் என்றால் ஆமாம்.**

**மறுவிசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.325 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.6 P.W.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரகு | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 25.02.2026.

முதல் விசாரணை

நான் இந்திரா நகரில் வசித்து வருகிறேன். அண்ணா குடியிருப்பு அருகில் சலூான் கடை வைத்துள்ளேன். கடந்த 26.03.2025 ம் தேதி மாலை 5.30-6.00 மணியளவில் என் நண்பர் விக்ரம் வீட்டின் வழியாக என் வீட்டிற்கு சென்றேன் அப்போது விக்ரம் வீட்டில் கூட்டமாக இருந்தார்கள் போலிசார் அங்கு இருந்தார்கள். என்ன என்று கேட்ட போது விக்ரம் வீட்டை உடைத்து நகை பணம் திருடுபோனதாக சொன்னார். போலிசார் அங்கு வந்து கைரேகை ஆய்வு செய்து கொண்டிருந்தார்கள். போலிசார் வரைபடம் வரைந்திருந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் மோகன்குமாரும் சாட்சி கையொப்பம் போட்டோம்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகசர் அசா.ஆ.8 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. கடை வைத்திருபபதாக சொல்லியுள்ள நிலையில் கடை எங்குள்ளது

என்றால் பழனிரோடு அண்ணா குடியிருப்பு. நண்பர் விக்ரம் வீடு தாண்டி தான் உங்கள் வீடு உள்ளதா என்றால் இல்லை என் வீடு தாண்டி தான் அவர் வீடு என் வீடு மெயின் ரோட்டில் மேல் உள்ளது. மெயின் ரோட்டின் பக்கத்தில் கடை வைத்துள்ளிர்கள் என்றால் இல்லை கடை பழனி மெயின் ரோட்டில் உள்ளது. உங்கள் வீட்டிலிருந்து கடைக்கு வர விக்ரம் வீடு வழியாக வர அவசியம் இல்லை என்றால் ஆமாம். கையெழுத்து போட்ட ஆவணததில் உள்ள விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் இல்லை படித்து பார்த்து தான் போட்டேன். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம், புகார் கொடுத்து பின்னிட்டு காவல் நிலையம் சென்று படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். விக்ரம் உங்கள் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம்அளிக்க வந்துள்ளிர்கள் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.